***DEPOSITION OF WITNESS***
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**OS.No. 83/2018**

P.W.2 திருமதி.ரம்யா க/பெ.செந்தில்குமார் நாள் – 12.09.2025.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

எனது நிரூபண பிரமாணவாக்குமூலம் நான் சொல்லி தாக்கல் செய்யப்பட்டது. அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும் . இந்த வழக்கின் வழக்குரை யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. A–அட்டவணை சொத்தை விற்று தான் எனது மாமனார் B–அட்டவணை சொத்தை வாங்கினார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் . அது என்ன ஆவணம் என்றால் 363, 364, 365 ஆகிய சர்வே எண்களில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் . பூர்வீக சொத்தின் ஆவணங்களை எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன் . எனக்கு 1997 ல் திருமணம் நடந்தது . அதற்கு முன்பு என்ன நடந்தது என்று எவ்வாறு தெரியும் என்றால் பரம்பரை சொத்து உள்ளது என்பதை எனது உறவினர்கள் மூலம் தெரிந்து கொண்டேன் . அதன்பிறகு கண்டுபிடித்து நாங்கள் அந்த ஆவணத்தை எடுத்துள்ளோம் . நானும், எனது கணவரும் திருமணம் செய்தது ஒருவரை ஒருவர் விரும்பி தனியாக திருமணம் செய்து கொண்டோம் . எனது கணவர் செந்தில்குமார் எங்கு இருக்கிறார் என்று எனக்கு தெரியாது . எனது வழக்குரை மற்றும் வாக்குமூலத்தில் எனது கணவர் மலேசியாவில் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் வழக்கு தாக்கல் செய்யும்போது மலேசியாவில் இருந்தார் . தற்போது எங்குள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . இந்த வழக்கு தாக்கல் செய்து 3 வருடங்கள் கழித்து மலேசியாவில் இருந்து நாயக்கர்பட்டிக்கு வந்தார் . அதன்பிறகு எனது கணவர் குடித்துவிட்டு வந்து அடித்து கொடுமைபடுத்தினார் .

நானும், எனது கணவரும் ஒன்றாக விசேசத்தில் கலந்து கொண்டோம் என்றால் ஒன்றாக கலந்துகொள்ளவில்லை, நானும் செல்வேன் , அவரும் வருவார் . இந்தியாவிற்கு வந்த பிறகு குடித்துவிட்டு எங்குவேண்டுமானாலும் விழுந்து கிடப்பார். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவண புகைப்படத்தில் நானும், எனது கணவர் செந்தில்குமாரும் கலந்து கொண்டோம் என்றால் சரிதான் , அது எனது நாத்தனாரின் மகனின் திருமணமாகும் . எனது கணவரின் அண்ணன் மூர்த்தி எப்போது இறந்தார் என்றால் 2015 ல் இறந்தார் என்பது ஞாபகம் . தற்போது எனது கணவர் மலேசியாவில் இல்லை . அ–பதிவேடு மற்றும் எனது தகப்பனார், எனது தகப்பனாரின் தாயர் ஆகியோரிடம் தெரிந்து கொண்டு வம்சாவளியை இந்த வழக்கில் தெரிவித்திருக்கிறேன். எனது மாமனார் சொத்து பிரித்தது, எவ்வளவு சொத்து வைத்திருந்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் . A–அட்டவணை சொத்தை விற்று தான் , B–அட்டவணை சொத்து வாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல . எனது கணவருக்கும், அவரது சகோதரர் மூர்த்திக்கும் தனித்தனியாக என் மாமனார் உயிருடன் இருந்த காலத்திலேயே சொத்து பிரிக்கப்பட்டு , தனியாக விவசாயம் செய்து வந்து, அதிலுள்ள பேர்செட்டை மட்டும் பொதுவாக வைத்து விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல . தற்போது வழக்கு சொத்தை யார் விவசாயம் செய்து வருகிறார்கள் என்பது எனக்கு தெரியாது . நாங்களும் வழக்கு போடும்போதும், தற்போது விவசாயம் செய்யவில்லை என்றால் சரிதான் . எனது நாத்தனார் பாப்பாத்தி அ.வ.எண்.118/2008 புதுக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அந்த தீர்ப்பின் அடிப்படையில் இடத்தை அளக்க வரும்போது தான் எங்களுக்கு நேரடியாக தெரியும். எனது நாத்தனாருக்கு என்ன சொத்து பிரிந்தது என்று எனக்கு எதுவும் தெரியாது , என்னை எங்கேயும் கூட்டிச்செல்லமாட்டார்கள். எனது பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 6–ல் எனது நாத்தனாருக்கு என்ன சொத்து பிரித்துக்கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் பொது சொத்தை விற்று கொடுத்ததாக

சொன்னார்கள். பரம்பரை சொத்தையும் சேர்த்து விற்கு கொடுத்தார்கள் . பரம்பரை சொத்தை விற்று கொடுத்தார்கள் என்று எனது பிராது மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான் . வழக்கு சொத்தில் தற்போது வரை நாங்கள் விவசாயம் செய்து வருகிறோம் என்று சொல்வது பொய் தான் . B–அட்டவணை சொத்தில் தான் 1/3 பாகம் கேட்டுள்ளோம் என்றால் சரிதான் . வா.சா.ஆ.23 ஆவணம் எனது கணவரின் சகோதரர் மூர்த்தி பெயரில் அப்பாவுசானையார் மகன் பிச்சைசானையார் மற்றும் அவரது வாரிசுகளிடம் கிரயம் பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான் . வா.சா.ஆ.24 ஆவணம் எனது சகோதரர் மூர்த்தி பெயரில் அப்பாவுசானையார் மகன் பிச்சைசானையார் மற்றும் அவரது வாரிசுகளிடம் கிரயம் பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான் . B–அட்டவணை சொத்தில் மேற்கண்ட இரண்டு ஆவணங்களும் 1 மற்றும் 2 சொத்துக்கள் ஆகும். வா.சா.ஆ.33 ஆவணத்தில் மூர்த்தி மற்றும் எனது கணவர் இருவரும் 1ம் பிரதிவாதிக்கு விற்ற சொத்தாகும். அது B–அட்டவணை சொத்தில் 6–வது சொத்து என்றால் சரிதான் . தற்போது என்னிடம் காட்டப்படும் வா .சா.ஆ.33 ல் சாட்சியாக எனது மாமியார் ராதாவும் , நானும் கையெழுத்து செய்துள்ளோம் என்றால் நான் மேற்கண்ட பத்திர பதிவிற்கு செல்லவில்லை . அதிலுள்ள கையொப்பம் என்னுடையது அல்ல . எனது கையொப்பம் இல்லாததால் வா.சா.ஆ.33 ஆவணம் மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல, உண்மையான ஆவணம் தான். எனது கணவர் செந்திலுக்கு எனது மாமனார் பெயரளவிற்கு பத்திரப்பதிவு செய்யாததால் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் எனது கணவரின் சகோதரர் மூர்த்தி மற்றும் எனது மாமியார் மற்றும் நானும் சாட்சியாக கையொப்பம் செய்து மேற்கண்ட சொத்தை விற்றோம் என்றால் நாங்கள் விற்கவே இல்லை . B–அட்டவணை சொத்தில் 374/2A, 117/14, 117/15 ஆகியவை தான் எஞ்சிய சொத்துக்கள் என்றால் சொத்து உள்ளது. எனது கணவர் சொத்தை விற்றுவிடுவார் என்பதால் , எனது மாமனார் மேற்கண்ட சொத்தை தனது பெயரில் வைத்துக்கொண்டு இறக்கும்தருவாயில்

மேற்கண்ட சொத்தை எழுதி வைக்காமல் எங்களுக்கு ஒதுக்கிய சொத்தில் நாங்கள் நேரடியாக விவசாயம் செய்து வந்தோம் என்றால் சரியல்ல . எங்களது ஊரில் பஞ்சாயத்து நடந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும் . என் மாமனார் உயிருடன் இருந்த காலத்தில் பஞ்சாயத்து நடந்ததா என்றால் நடந்தது . பஞ்சாயத்தில் என்ன நடந்தது என்றால் சொத்தை பொது சொத்தாக வைத்துக்கொள்வோம் என்று சொன்னார்கள் . அவ்வாறு பொது சொத்தாகவைத்துக்கொள்வோம் என்று எனது பிராதிலோ , பிரமானவாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் உயிருடன் இருந்த காலத்தில் என்னுடைய சம்பாத்தியத்தை வைத்து தான் குடும்பம் நடத்தினேன். எனது கணவர் குடும்பத்திற்கு எந்த வருமானமும் தர மாட்டார். 2002–லேயே எங்களுக்கு சொத்து பிரிந்து விட்டது என்றும் , எனது கணவருக்கு ஒதுக்கிய சொத்தில் பாலகிருஷ்ணன் என்பவரிடம் 2.25 ஏக்கர் சொத்தை எனது மாமனார் உயிருடன் இருந்த காலத்தில் எனது கணவர் வாங்கிய கடனுக்காக எனது மாமனாரே விற்றுக்கொடுத்தார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது . எனது மாமனார் இறந்தவுடன் எனது கணவர் ஏற்பாட்டில் சண்முகம் மற்றும் அவரது மனைவி மீனாட்சிக்கு 2.5 ஏக்கர் விற்றுள்ளார் என்றால் எனது கணவர் பெயரில் சொத்தும் இல்லை , விற்கவும் இல்லை. பிரதிவாதிக்கும் 1.10 ஏக்கர் மற்றும் K.செல்வராஜ் என்பவருக்கும் எனது கணவர் ஏற்பாட்டில் தான் விற்றுள்ளோம் என்றால் சரியல்ல , அது எனக்கு தெரியாது. எனது கணவருக்கு ஒதுங்கிய சொத்தை எனது மாமியார் மற்றும் எனது நாத்தனார் மற்றும் எனது கணவரின் சகோதரர் மூர்த்தை ஆகியோரை வைத்து எனது கணவர் விற்றுவிட்டார் என்றால் சரியல்ல , அதுபற்றி எனக்கு தெரியாது. C–அட்டவணை சொத்தில் 118/9, 365/4, 373/3 ஆகிய சொத்துக்களையும் எனது கணவர் தான் விற்றுள்ளார் என்றால் விற்கவில்லை . மூர்த்தியும் செந்திலும் சேர்ந்து விற்றுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. C–அட்டவணை சொத்தில் 373/2 சொத்து எங்களிடம் உள்ளது

என்றால் எங்களிடம் எந்த சொத்தும் கிடையாது . மூர்த்தி இறந்த பிறகு வண்டிபாதைக்கும், போர்செட்டிற்கும் ஊரில் பஞ்சாயத்து வைத்து பணம் வாங்கிக்கொண்டோம் என்றால் நான் வாங்கவில்லை . 01.10.2014 ல் எனக்கும், எனது கணவருக்கும் பஞ்சாயத்து ஏற்பட்டு அதில் ஒரு ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் இல்லை . 04.01.2016 ம் தேதியில் மூர்த்தி இறந்த பிறகு வண்டிபாதைக்கும், போர்செட்டிற்கும் ஊரில் பஞ்சாயத்து வைத்து பணம் வாங்கிக்கொண்டோம் என்றால் நான் வாங்கவில்லை . அந்த ஆவணத்தில் நானும் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் இல்லை . எனது பிராதிலும், பிரமாணவாக்குமூலத்திலும் முரண்பட்ட கருத்துக்களை கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட சொத்துக்கள் அனைத்தும் 11 ஏக்கர் இருக்கும். அதில் எனது கணவர் பங்கிற்கு 5-1/2 ஏக்கர் கிடைக்க வேண்டியது . சுப்புலெட்சுமி என்பவருக்கும் பாகம் கிடைக்க வேண்டும் என்றால் சரிதான் . நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் சுப்புலெட்சுமிக்கு பாகம் கிடைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறேனா என்றால் கூறியிருக்கிறேன் . வா.சா.ஆ.19 ல் அவ்வாறு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல . பாப்பாத்தி என்பவர் தாக்கல் செய்த வழக்கில் சுப்புலெட்சுமியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான் . எனது மாமனார் உயிருடன் இருந்த காலத்தில் அவருடன் நல்ல உறவுமுறையில் நான் இருந்தேனா என்றால் இல்லை, அவர் குடித்துவிட்டு தகாத வார்த்தைகள் பேசுவதால் சுமூக உறவு இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . எனக்கும், எனது கணவருக்கும் காதல் திருமணம் செய்ததால் , கூடுதலாக 1/2 ஏக்கர் எனது மாமனார் கொடுத்தார் என்றால் எந்த சொத்தும் தரவில்லை . எனது மைத்துனர் இறந்ததற்கு பின்னிட்டு சொத்துக்களில் பங்குபோடுவோம் என்று இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . நான் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் B-அட்டவணை சொத்தில் சில சொத்துக்கள் வங்கியில் அடமானம் இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . தாவா

சொத்துக்கள் எனது மாமனாரின் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றும், அதனை பொறுத்து உயில் எழுதிவைக்க அவருக்கு அருகதை உள்ளது என்றால் சரியல்ல. வாய்மொழியாக எனது மாமனார் எங்களுக்கு ஒதுக்கிய சொத்தில் எனது ஆடம்பர வாழ்க்கையால் தான் விற்க நேரிட்டது என்றால் சரியல்ல . தற்போது பதிவுத்துறை அலுவலகத்தில் நான் செய்த கையெழுத்தை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் போகவே இல்லை . எங்களுக்கு ஒதுக்கிய பாக சொத்துக்கள் அனைத்திலும் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் . (சாட்சியிடம் அவரது வக்காலத்து காட்டப்பட்டது ). மோசடியான வழக்கை தாக்கல் செய்து, ஏற்கனவே பிரிவுபட்ட பாகத்தை ஒதுக்கி எனது கணவருடன் சேர்ந்து கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . நான் தாக்கல் செய்துள்ள இந்த பிராது தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*